සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**16 T I**

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் ........................................ இஸ்லாம் I நேரம் : 1 மணித்தியாலம்**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக:

01. வேதமும் ஸுஹுபுவம் வழங்கப்பட்ட இறைதூதர் யார்?
(1) ஈஸா (அலை) (2) ஆதம் (அலை) (3) மூஸா (அலை) (4) ஷீது (அலை)

02. " அத்தஹாரத்" எனும் அறபுப் பதம் குறிக்கும் கருத்து?
(1) பேணுதல் (2) அசுத்தம் (3) எண்ணம் (4) சுத்தம்

03. 30 ஸுஹுபுகள் பெற்ற நபி?
(1) இத்ரீஸ் (அலை) (2) ஷீது (அலை) (3) ஆதம் (அலை) (4) மூஸா (அலை)

04. இஸ்லாமிய அகீதா கலை அழைக்கப்படும் விதம்?
(1) இல்முல் பிக்ஹ் (2) இல்முல் ஹதீஸ் (3) இல்முல் பராஇல் (4) இல்முல் அகீதா

05. மறுமை வாழ்வுடன் தொடர்புடைய அகீதா பிரிவு
(1) அர்ருளாஹிய்யாத் (2) அஸ்ஸம் இய்யத் (3) அந்நுபுவ்வத் (4) அல் இலாஹிய்யத்

06. தக்பீர் தஹ்ரீம் எனப்படுவது
(1) ஆரம்ப தக்பீர் (2) கடைசித் தக்பீர் (3) ருகூவில் ஓதும் துஆ (4) ஸுஜூதில் ஓதும் துஆ

07. மானக்கேடான, வெறுக்கத்தக்க விடயங்களை விட்டும் பாதுகாக்கும் என அல்குர்ஆன் குறிப்பிடும் கடமை?
(1) தொழுகை (2) நோன்பு (3) ஹஜ் (4) ஸகாத்

08. குல்லதைன் என்பதன் அளவு?
(1) 110 லீற்றர் (2) 120 லீற்றர் (3) 210 லீற்றர் (4) 220 லீற்றர்

09. அல்மாஉன் கஸீர் என்பது?
(1) அழுக்கு நீர் (2) பாவிக்கப்பட்ட நீர் (3) சொற்ப நீர் (4) அதிக நீர்

10. தொழுகையில் இப்திராஷ் இருப்பு எனப்படுவது?
(1) நடு இருப்பு (2) ஸுஜூதில் இருப்பது
(3) இறுதி அத்தஹிய்யாத்தில் இருப்பது (4) நிலையில் இருப்பது

11. உளத்தூய்மை எனும் கருத்தை தரும் சொல்?
(1) தவ்பா (2) தவக்குல் (3) இ∴லாஸ் (4) வரஉ ஆகும்.

12. பேணுதலைக் குறிக்கும் அறபுப் பதம்?
(1) ஸுஹ்த் (2) வரஉ (3) மஹப்பா (4) தவ்பா

13. ஸூரா "பலக்" இன் ஆயத்துக்களின் எண்ணிக்கை.
(1) 3 (2) 4 (3) 5 (4) 6 ஆகும்

14. " நிச்சயமாக நல்லவைகள் தீயவைகளைப் போக்கிவிடும் என்பது?
(1) குர் ஆனின் கூற்று (2) ஒரு ஸஹாபியின் கூற்று
(3) நபியவர்களின் கூற்று (4) ஒரு பெரியாரின் கூற்று

15. வுளுவுக்குப் பகரமாக நிறைவேற்றப்படும் கருமம்?
(1) ஜபீரத் (2) ஸலாத் (3) தயம்மும் (4) சஹாதத் ஆகும்.

16. அர் ரஹீம் என்பது?
(1) அளவற்ற அருளாளன் (2) நிகரற்ற அன்புடையோன்
(3) பாவங்களை மன்னிப்பவன் (4) எல்லாப் புகழும் உடையவன்

17. நாம் ஈமான் கொள்ளவேண்டிய அம்சங்கள்?
(1) 4 (2) 5 (3) 6 (4) 7

18. ஸுர்யானி மொழியில் அருளப்பட்ட இறைவேதம்?
(1) தௌராத் (2) ஸபூர் (3) புர்கான் (4) இன்ஜீல்

19. வுளு செய்ய பயன்படுத்த வேண்டிய நீரின் வகை.
(1) அல்மாஉல் முஸ்த.்.மல் (2) அல்மாஉல் முதநஜ்ஜில்
(3) அல்மாஉல் தாஹிர் (4) அல்மாஉல் தஹுர்

20. 2018 ஆம் ஆண்டு எத்தனையாவது ஹிஜ்ரி ஆண்டாகும்?
(1) 1435 (2) 1338 (3) 1439 (4) 1437

21. அல் குர்ஆன் அருளப்பட்ட ஒழுங்கு முறை.
(1) தர்தீபுந் நுஸுல் (2) தர்தீபுத் திலாவத் (3) தர்தீபுல் கிராஅத் (4) தர்தீபுல் உஸுல்

22. ஏழு தக்பீர்கள் சொல்லப்படும் தொழுகை எது?
(1) தராவீஹ் தொழுகை (2) ஜனாஸா தொழுகை (3) பெருநாள் தொழுகை (4) வித்ருத் தொழுகை

23. ஹிதாயத் எனும் பதம் குறிப்பது.
(1) தூதுத்துவம் (2) நபித்துவம் (3) நேர்வழி (4) வழிகேடு

24. ” முஜாஹதத்துன் நப்ஸ்” எனும் அறபுச் சொல்லின் கருத்து?
(1) எதிரியுடன் போராடுவது (2) உளப்போராட்டம்
(3) நாவினால் போராடுவது (4) யுத்தத்தில் போராடுவது

25. ”அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ” என அழைக்கப்படுவோர்.
(1) இமாம்களைப் பின்பற்றுவோர் (2) சூபி மகான்களைப் பின்பற்றுவோர்
(3) நபி(ஸல்) அவர்களையும் சஹாபாக்களையும் பின்பற்றுவோர்
(4) சஹாபாக்களை மாத்திரம் பின்பற்றுவோர்.

26. நபிமார்களின் வாரிசுகள் என்று அழைக்கப்படுவோர்.
(1) செல்வந்தர்கள் (2) அறிஞர்கள் (3) ஏழைகள் (4) முதியவர்கள்

27. மதுபானம் எவ்வகை நஜீஸை சேரும்?
(1) கடுமையானது (2) இலகுவானது (3) சாதாரணமானது (4) அதி கடுமையானது

28. ஜனாஸாவின் கடமைகளை நிறைவேற்றுவது?
(1) பர்ளுகள் (2) பர்ளு கிபாயா (3) மக்ருஹ் (4) சுன்னத்

29. நபிமார்களுக்கு வழங்கப்பட்ட சுஹுபுகளின் மொத்த எண்ணிக்கை ?
(1) 100 (2) 150 (3) 130 (4) 110

30. நபி (ஸல்) அவர்கள் பிறந்த ஆண்டு?
(1) கி.மு 570 (2) கி.மு 570 (3) கி.பி 570 (4) கி.பி 571

31. ஜமாஅத்தாக நிறைவேற்றப்படும் சுன்னத்தான தொழுகைகளில் ஒன்று.
(1) ஸலாதுஸ்ஸபர் (2) ஸலாதுல் ஹாஜஹ் (3) ஸலாதுல் இஸ்ராக் (4) ஸலாதுல் ஈதைன்

32. நிரல் **X** இன் கீழுள்ள சொற்களுக்கு பொருந்தும் விதத்தில் நிரல் **Y** இல் உள்ளவற்றை ஒழுங்கு படுத்தினால், பெறப்படும் ஒழுங்கு வரிசை.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. தொழுகை | A. மீஸான் |
| 2. ஹஜ் | B. முகம் கழுவுதல் |
| 3. மறுமை | C. கஸ்று |
| 4. வுளூ | D. தவாப் |

(1) CDBA (2) CDAB (3) CADB (4) CBAD

33. வஹி மத்லுவ்வு எனும் பிரிவில் உள்ளடங்குவது.
(1) அல்குர்ஆன் (2) ஹதீஸ் (3) ஸுன்னா (4) இஜ்மா ஆகும்.

34. நபி மூஸா (அலை) அவர்களுடன் தொடர்புடைய மலை எது?
(1) ஜூதிய்யு மலை (2) ஸபா மலை (3) துர்ஸீனா மலை (4) மர்வா மலை

35. மீளுதல் அல்லது திரும்பி விடுதல் எனும் கருத்தைத் தரும் சொல்.
(1) ஸுஹ்த் (2) வரஉ (3) தெளபா (4) இ.்.லாஸ்

36. துஆஉல் இஸ்திப்தாஹ் ஓதப்படும் சந்தர்ப்பம்.
(1) ஸுஜூதில் (2) ருகூவில் (3) நிலையில் நிற்கும்போது
(4) ஆரம்பத் தக்பீர் கட்டியவுடன்

37. தயம்முமின் உறுப்புகள்.
(1) 2 (2) 3 (3) 4 (4) 5

38. செல்வத்தோடு தொடர்புடைய ஒரு இபாதத்.
(1) தொழுகை (2) நோன்பு (3) திக்ர் (4) ஸகாத்

39. அல் குர்ஆன் குறிப்பிடுகின்ற உள்ளத்தின் நிலைகள் எத்தனை?
(1) 2 (2) 3 (3) 4 (4) 5 ஆகும்

40. அல்லாஹ் மிகத் தூய்மையானவன் எனும் கருத்தைத் தரும் அறபுப் பதம்?
(1) அல்லாஹு அக்பர் (2) அல்ஹம்துலில்லாஹ்
(3) மாஷா அல்லாஹ் (4) சுப்ஹானல்லாஹ்

* * *

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
Provincial Department of Education - NWP
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

16 T II

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் ......................................** **இஸ்லாம் II** **நேரம் : 2 மணித்தியாலம்**

- **முதலாம் வினாவுக்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:**

சுருக்கமான விடை தருக:

01. (i) உடலோடு தொடர்பான இபாதத்துகள் 2 தருக.
(ii) கடுமையான நஜீஸுக்கு 2 உதாரணங்கள் தருக.
(iii) தவர்ருக் இருப்பு என்றால் என்ன?
(iv) மாஉன் தாஹிருக்கு 4 உதாரணங்கள் தருக.
(v) இலகுவான நஜீஸ் பட்டால், அதனை சுத்தம் செய்யும் முறையைத் தருக.
(vi) வேதம் வழங்கப்பட்ட இரண்டு றஸூல்மார்களின் பெயர்களைத் தருக.
(vii) ஸிபத் என்னும் அறபுப் பதத்தின் கருத்தை தருக.
(viii) அந்நுபுவ்வாத் எனும் சொல் எதனைக் குறிக்கின்றது?
(ix) ஹஜ் கிரியைகளின்போது அதிகம் நினைவு கூறப்படும் நபி யார்?
(x) ஜபீரத் என்றால் என்ன? (10x2=20 புள்ளி)

02. (i) இபாதாவின் வகைகளில் பர்ளின் 2 வகைகளையும் தருக.
(ii) இஸ்லாமிய அகீதாவைப் பாதுகாத்த இமாம்கள் மூவரின் பெயர்களைத் தருக.
(iii) ஒரு மனிதனின் அன்றாட செயற்பாடுகள் இபாதத் ஆக மாறுவதற்குரிய நிபந்தனைகள் 5 எழுதுக. (2+3+5= 10 புள்ளிகள்)

03. (i) தொழுகை பற்றிக் குறிப்பிடும் ஒரு குர்ஆன் வசனத்தை அல்லது ஹதீஸ் ஒன்றை எழுதுக.
(ii) சுன்னத்தான தொழுகைகளுக்கு மூன்று உதாரணங்கள் தருக.
(iii) தொழுகை மூலம் கிடைக்கும் ஆன்மீக பயன்கள் 5 தருக. (2+3+5= 10 புள்ளிகள்)

04. (i) ஸாலிஹான அமல்கள் என்றால் என்ன?
(ii) சுத்தம் சம்பந்தமான குர்ஆன் அல்லது ஹதீஸ் வசனமொன்றைத் தருக.
(iii) கடுமையான நஜீஸை சுத்தம் செய்யும் முறையினை விளக்குக. (2+3+5= 10 புள்ளிகள்)

05. (i) தஸ்கியா என்பதன் மொழிக் கருத்து என்ன?
(ii) அல் குர்ஆன் குறிப்பிடும் மனித உள்ளத்தின் மூன்று வகைகளையும் தருக.
(iii) உளப்பரிசுத்தம் ஏற்படுவதற்காக நாம் கடைப்பிடிக்கவேண்டிய ஐந்து விடயங்களைத் தருக. (2+3+5= 10 புள்ளிகள்)

06. (i) ”ரஹ்பானிய்யா என்பதனால் கருதப்படுவது என்ன?
(ii) ஒரு முஸ்லிம் கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மீகப் பண்புகள் மூன்று தருக.
(iii) தௌபாவின் நிபந்தனைகளைத் தருக. (2+3+5= 10 புள்ளிகள்)

07. (i) தயம்மும் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் 2 தருக.
(ii) நபி(ஸல்) அவர்கள் ஐங்காலத் தொழுகைக்குப் பின் ஓதிய மூன்று துஆக்களை குறிப்பிடுக.
(iii) அகீதாவில் பிளவுகள் ஏற்பட்டமைக்கான காரணிகள் ஐந்து தருக. (2+3+5= 10 புள்ளிகள்)

முதலாம் தவணைப் பரீட்சை - 2018
இஸ்லாம் - தரம் 10
பகுதி- I
விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 3 | 21. 1 | 31. 4 |
| 2. 4 | 12. 2 | 22. 3 | 32. 2 |
| 3. 1 | 13. 3 | 23. 3 | 33. 1 |
| 4. 4 | 14. 1 | 24. 2 | 34. 3 |
| 5. 2 | 15. 3 | 25. 3 | 35. 3 |
| 6. 1 | 16. 2 | 26. 2 | 36. 4 |
| 7. 1 | 17. 3 | 27. 3 | 37. 1 |
| 8. 3 | 18. 4 | 28. 2 | 38 4 |
| 9. 4 | 19. 4 | 29. 4 | 39. 2 |
| 10. 1 | 20. 3 | 30. 4 | 40. 4 |

பகுதி - II

01. (i) தொழுகை, நோன்பு, ஹஜ், ஜிஹாத் போன்றன.
(ii) நாய், பன்றி அல்லது அவற்றின் பாகங்கள்.
(iii) கடைசி அத்தஹிய்யாத்தில் அமரும் இருப்பு.
(iv) தேநீர், பன்னீர், பழச்சாறு, பார்ளி, மென்பானங்கள் போன்றன.
(v) அதனை பிழிந்து விட்டு அவ்விடத்திற்கு தண்ணீரை தெளித்து விடுதல்.
(vi) மூஸா(அலை), தாவூத்(அலை), ஈஸா(அலை), முஹம்மது நபி(ஸல்)
(vii) பண்புகள் ஆகும்.
(viii) நபிமார்கள், ரஸூல்மார்கள், வேதங்கள், ஆகியவற்றுடன் தொடர்பான நம்பிக்கைகள்.
(ix) நபி இபுறாஹீம்(அலை)
(x) காயங்களுக்கு போடப்படும் கட்டு, அல்லது பேன்டேஜ்

02. (i) பர்ளு ஐன் , பர்ளு கிபாயா

(ii) அஹ்மத் பின் ஹன்பல், இமாம்அபூ மன்ஸூர் அல் மாதுருதி, இமாம் அபூ ஜ.ஃபர் அந்தஹாவி

(iii) 1) தூய எண்ணம்,
2) இஸ்லாத்தின் அனுமதி,
3) ஷரீஆ வரையறைகளை மீறாமை,
4) அடிப்படை வணக்கங்களுக்கு தடை இல்லாமல் இருத்தல்,
5) சேர்த்தியும் ஒழுங்கும்.

03. (i) பொருத்தமான வசனங்களுக்கு புள்ளி வழங்குக.

(ii) ஐங்காலத் தொழுகைக்கு முன் பின் உள்ளவை. ளுஹா, வித்ர், தஹஜ்ஜத், கிரகணத் தொழுகை, பெருநாள் தொழுகை போன்றன.

(iii) ஆன்மீக பரிபக்குவம், 1) நன்மை கிடைக்கும், 2) சுவனம் கிடைக்கும்,
3) பாவங்கள் மன்னிக்கப்படும் 4) வினைச்சுவடி வலக்கரத்தில் கிடைக்கும்,
5) கப்ரின் வேதனை நீக்கப்படும். இவை போன்ற ஆன்மீகத்துடன் சம்பந்தப்பட்டவை.

04. (i) உரிய நேரத்தில் பொருத்தமான செயல்களைச் செய்வது, அல்லது உலக மறுமை வாழ்வுக்கும் தனிநபர் சமூகவாழ்விற்கும், ஆன்மீக, லௌகீக வாழ்விற்கும்,பொருத்தமாக அமையும் அனைத்து செயற்பாடுகளும் ஸாலிஹான அமல்கள் ஆகும்.

(ii) பொருத்தமான வசனமொன்றுக்கு புள்ளி வழங்குக.

(iii) முதலில் நஜீஸை நீக்குதல், ஏழுமுறை கழுவுதல், ஒருமுறை மண் சேர்த்து கழுவுதல்

05. (i) உளத்தூய்மை

(ii) (1) அந் நப்ஸுல் அம்மாரா பிஸ்ஸூயி,
(2) அந் நப்ஸுல் லவ்வாமா
(3) அந் நப்ஸுல் முத்மஇன்னா

(iii) இழி பண்புகளிலிருந்து நீங்குதல், கடமையான இபாதத்துகளை நிறைவேற்றல், உபரியான (நபிலான) வணக்கங்களை நிறுைவேற்றல், திக்ர் செய்தல், குர்ஆன் ஓதுதல், தவ்பா செய்தல் போன்ற விடயங்கள்.

06. (i) துறவரம்

(ii) தௌபா, இ∴லாஸ், ஸுந்த், வரஉ, மஹப்பா

(iii) தூய எண்ணத்தோடு தௌபா செய்தல், செய்த பாவங்களை முற்றாக விட்டுவிடுதல், செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி கைசேதப்படல், மனிதர்களோடு சம்பந்தப்பட்ட பாவங்களாயின் அவர்களிடம் மன்னிப்பு கேட்டல்.

07. (i) நீர் பற்றாக்குறை ஏற்படல், நீர் இல்லாதபோது, நோய் காணும்போது, ஜபீரத் போடப்படும்போது

(ii) பொருத்தமான துஆக்களுக்கு புள்ளி வழங்குக.

(iii) அரசியல் காரணிகள், அந்நிய மத கலாசார தாக்கம், மூட நம்பிக்கைகள், பகுத்தறிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தமை, ஆராயவேண்டாம் என தடுக்கப்பட்டவற்றை ஆராய முற்பட்டமை, இல்முல் கலாம், தஸவ்வுல் போன்ற துறைகளின் தாக்கம். அகீதாவின் எளிமைத் தன்மையை பேணத் தவறியமை.

* * *

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**